# மரணம் வாழ்வின் முடிவல்ல



## அகிலன் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் வாழ்வின் முடிவல்ல..

- அகிலன் கவிதைகள் -

தொகுப்பு:

சார்ள்ஸ்

PUBLIC LIBRARY
JAFFNA.

ஆத்ம நண்பர்களின் இதய ராகங்களுக்காக

வசந்தம் வெளியீடு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ‘மரணம் வாழ்வின் முடிவல்ல’

(மறைந்த எஸ. தி. அகிலன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு)

சேர்வு எண்
894.8111
அகில

# திருச்செல்வம் அகிலன்

தந்தை: எஸ். திருச்செல்வம்

தாய்: தி. ரஞ்சிதமலர்

ஜனனம்: 5-5-1970

மரணம்: 10-5 1989

81765

நூல்: மரணம் வாழ்வின் முடிவல்ல
விடயம்: கவிதை
முதற்பதிப்பு: 1990 (10-5-1990)
தொகுப்பு: சார்ள்ஸ்
அட்டை: தேவா / கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.
அச்சுப்பதிப்பு: புதிய சித்திரா பதிப்பகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

மரணித்த மாணவத்
தோழர்கள் அனைவருக்கும்
இக் கவிதா நூல் சமர்ப்பணம்

1317 ZE54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது முன்னுரை அல்ல..!
தொகுப்புரையும் அல்ல.....!

# காலத்தால் அழியாத
# அகில நினைவுகள்.........

மரணங்கள் கொடுமையானதொரு நிகழ்வாக இயல்பாகி விட்ட நமது மண்ணில், ஓர் இழப்பாக அகிலனின் இறப்பு நிகழ்ந்தது 10.05.89 காலை 6.25 இல் யாழ் பிறவுண் வீதி — அரசடி வீதி இணையும் சந்தியில் கொடிய காற்றுடன் அவன் உயிரும் கலந்து கொண்டது எல்லாவற்றையும் மறந்துவிடலாம் ஆனால் அகில நினைவுகள் நெஞ்சினை வருடிக் கொண்டேதான் இருக்கும்..

அவன் மரணம் எங்களுக்குப் புதியதான தொன்றல்ல வீதிகளில் சீட்டியடித்து, பின் பனை வெளிகளில் கருத்துக்களால் மோதுவது தொட்டு என்னுடன் அவன் நெருங்கியவன். ஆனால் கருத்தால் இணைந்தவனல்ல. அவனது கவிதைகளை நானே தொகுப்புஞ் செய்து; முன்னுரையும் எழுத வேண்டியுள்ளதை நினைத்து நான் துக்கங் கொள்ள வில்லை. அகமகிழ்கின்றேன், ஏனெனில் அகிலனின் படைப்புக்கள் எரித்து, அழித்து, காணுமல் போய் விட்டபோதிலும் எஞ்சியவற்றை மக்கள் முன் வெளிப்படுத்துவதில் நான் அகமகிழ்கின்றேன். உள்ளத்தால் உணர்வூட்டப் படுகின்றேன்.



முகத்தினில் நறுக்கு மீசை வெளிப்பட்டவனாய் அருகே வந்து ''நல்லாகத்தான் கட்டுரை எழுதியிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றாய் இன்னும் எழுது...'' கூறியவன் அகிலன் சில நாட்கள் தான் பழகிய முகம். எனது கட்டுரை ஒன்று ஈழமுரசு பத்திரிகையின் சிறுவர் பக்கத்தில் வெளிவந்தது. அப்போது ஈழமுரசு ஆசிரியராக இருந்தவர் அகிலனின் தந்தை எஸ். திருச்செல்வம் அவர்களாவர். பத்திரிகை ஆசிரியரொருவர் என்னை உற்சாகப் படுத்தியது போல் அவன் கூறியவை என்னில் பதிந்தன.

தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து கொண்டிருந்த கால கட்டத்தில் மாணவ இளைஞர்கள் போராட்ட அமைப்புக்களுடன் இணைந்து கொண்டிருந்த வேளையில் அகிலனும் 'கருத்து வீச்சுக்களால் ''தமிழீழ மாணவர் பேரவை''யுடன் முதலில் தன்னை இணைத்துக் கொண்டான், என்னுடனும் மாணவர் அமைப்புச் செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுவான்.

மறைந்த இலக்கியவாதி கே. டானியலின் 'அடிமைகள்' நூல் ஓர் நாள் அகிலன் கையினிலிருந்தது. முந்நூறு பக்கங்கள் இருக்கக்கூடிய அந்நாவலை ஓரிரு நாட்களுக்குள்ளேயே வாசித்து முடித்ததாகக் கூறினான் சாதி எதிர்ப்புப் போராட்டம் தன்னை வெகுவாகக் கவர்ந்தது என்றான் இளம் வயதிலேயே அரிய நூல்களைத் தேடி வாசிப்பதில் அவனுக்கு அலாதியான விருப்பம்.

## 85

சிங்கள இனவாத அரசு இராணுவ அட்டூழியங்களின் மூலம் ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைந்த கால கட்டங்களில் மாணவர் அமைப்புக்களின் மூலம் தனது செயற்பாடுகளை வலுவாக இணைத்துக் கொண்டான் அகிலன் ஓர் கட்டத்தில் 1985 நடுப்பகுதியில் முழு நேரப் போராளியாக மாறிட பாசறைப் பயிற்சியைப் பெற்றிடவும் முனைந்தான். ஆயினும் பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறல் கை கூடவில்லை, மீண்டும் மாணவர் பேரவையு டன் இணைந்து தீவிர போராளியாக பங்களித்தான்.

இக் காலத்தில் ''விடுதலை'' எனும் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றையும் நடாத்த முனைந்தான். ஓரிரு இதழ்களுடன் இம் முயற்சியும் கைகூடவில்லை.

26 யூன் 85 இல் பரி. யோவான் கல்லூரி அதிபர் செ. எ. ஆனந்தராஜா கொல்லப் பட்டதையடுத்து பாடசாலை பகிஸ்கரிப்பு நிகழ்ச்சிக்கு முழுமையாகப் பங் காற்றியவன் அகிலனே. அகிலனின் அறைக்குள் இருக் கும் சாய்பாபாவின் படத்தின் விளிம்பில் கல்லூரி அதி பர் ஆனந்தராஜாவின் படம் ஒன்றும் ஒட்டப்பட்டிருக் கும். காலையில் எழுகையில் சாய்பாபாவை நினைக்கா விடினும் அதிபர் ஆனந்தராஜாவை கண்முன் பார்த்த படியே துயில் எழுவான்.

1985ல் கல்லூரியில் துடுப்பாட்ட அணித்தலைவனாக அகிலன் இருந்தான். யாழ் இந்துக் கல்லூரியுடன் தோல்வியுறும் நிலையில் சற்றுச் சிரித்தபடி தோல்விகளே வெற்றிக்குச் சமம் என அகிலன் கூறியது அருகிலிருந்த பார்வையாளர் இவனை ஏழனமாகப் பார்க்கச்செய்தது. மனங்குழம்பாத நிலையில் தோல்வியை ஏற்றுக்கொண்ட வீரனாக அவன் விளையாட்டுக்களத்திலும் கூர்மையானான்



ஈழவிடுதலைப் போராட்டம் தீவிரமடைந்திருந்த வேளையில் குடாநாட்டுப் பிரதேசம் போராளிகளின் கட் டுப்பாட்டுக்குள்ளிருந்த காலகட்டம் இது. தாழ்த்தப் பட்ட மக்களிடத்திலும், பின்தங்கியுள்ள கிராமங்களிலும் கள ஆய்வுகளை அகிலன் மேற்கொண்டான். குருநகர் மீனவர் பிரதேச மாணவர்களிடத்தே அரசியல் கருத் துக்களை போதிப்பதிலும் முன்நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சிசம் கற்பதில் அகிலனுக்கு முழுமையான ஈடுபாடு இருக்கவில்லை. ஆயினும் சோசலிசக் கருத்துக்களையும் சித்தாந்தங்களையும் அவன் ஏற்றுகொண்டான். இவை பற்றிக் கதைக்கும்போதுதான் எனக்கும் அகிலனுக்கும் கருத்துமோதல்கள் வகுப்பிலும், வீதியிலும் ஏற்படுவதுண்டு.

எண்பத்தி ஆறின் பிற்பகுதியில் அகிலன் சார்ந்த மாணவர் அமைப்பு தடைசெய்யப்பட்டதன் மூலம் மனக்கிலேசம் அடைந்திருந்தான். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் அழிவுப்பாதைக்குள் சென்று கொண்டிருப்பதாக அடிக்கடி கூறுவான். சில காலங்களின் பின்னர் நான் சார்ந்த மாணவர் அமைப்புடன் கருத்துரீதியாக இணைந்து கொண்டான். ஆனால் செயற்பாட்டு ரீதியாக இணைந்து கொள்வதில் முழுமையான விருப்பங்கொண்டிருக்கவில்லை என்பதை நேரடியாகவே கூறுவான்.

## 87

வடமராட்சியில் நிகழ்தேறிய ஒப்பரேசன் - லிபரேஸன் படுகொலையை நினைவுகூர்ந்து எழுதிய அகிலனின் கவிதையிது. தேடுதல் வேட்டையின் பேரில் / தேவைகளை தீர்த்துக்கொள்ளும் / சோதனை என்னும் பெயரில் பெண்களை சுவைத்துப் பார்க்கும்... / சோகம் நிறைந்த பாடங்கள் முடிவில் / மக்கள் என்றும் / வரலாறு படைப்பர் / ஆகாயம் பிளக்கும் வரை / மானுடர்கள் எழுவர்.

இந்திய - ஒப்பந்தம் ஏற்பட்டதன் மூலம் இந்திய வல்லாதிக்கம் எமது மண்ணில் ஏற்படுவதை அகிலன் ஒரு போதும் ஏற்கவில்லை. இவ் ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அவன் எழுதிய கவிதைகள் ஒன்றிலிருந்து: இருக்கைதானு முக்கியம் / இல்லை / இருப்புக்கள்தான் / மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பையே /மறுத்துவிட்டு /அமுலுக்கு/ ஓ .. / பந்தம்.../ ஓ / மரண சாசனம்...

## 88

அத்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் எங்கள் இருண்ட வாழ்வு தொடர்ந்தது. வாய் திறக்கமுடியாத மௌனிகளாக, கண்ணுள்ள குருடர்களாக எங்கள் வாழ்வு அர்த்தமற்றதாக நீடித்தது. இந்திய இராணுவம் ஈழத்தமிழ் மக்களின் மீது அடாவடித்தன தாக்குதல்களை மேற்கொண்டிருந்த காலகட்டத்தில் மீண்டும் தீவிரமான 'இளைஞு'ஞன். ஒருங்கிணைப்புக்குழு முக்கியமானவர்களில் ஒருவனுகச் செயற்பட்டான்.

உயர்தர மாணர் ஒன்றிய கூட்டத்தில் இரு வாரங்களாகத் தொடர்ந்து "இந்திய - இலங்கை ஒப்பந்தமும் ஈழத்தமிழ் மாணவர்களது பாதுகாப்பு உரிமையும்" என்ற தலைப்பில் நான் உரையாற்றினேன். நான் கூறிய கருத்துக்களை அகிலன் ஏற்றுக்கொள்ளவில்லை. எனது உரையை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு அவன் என்னை வேண்டிக்கொண்டதும் நினைவிலிருந்து அழியமுடியாத பதிவாகும்.

## 89

கலை இலக்கியப் பயணத்தில் நீண்டதூரம் என்னுடன் இணைந்துகொண்டவன் இவன். மௌனியின் கதைகளைத் தேர்ந்தெடுத்து வாசிப்பதிலும்; பிச்சமூர்த்தியின் கவிதைகளை ஆழமான நோக்கில் உணர்ந்து கொள்வதிலும் இருவரும் ஒரே நோக்கினரே. எனது கவிதைகளை கைப்படிவ நகலில் வாசித்துவிட்டு பல ஆலோசனைகளை வகுப்பிலும், வீதியிலும் வழங்கியவன் அகிலன். எனது ஏழுகவிதை தொகுதிகளும் வெளிவந்திருக்கும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் அகிலனும் இருப்பானுயின் என்னைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி அவனுக்கு இருந்திருக்கும்.

அகிலனின் பிறந்ததினம் (5-5-1970) கார்ல் மார்க்ஸின் பிறந்த நாளுமாகும் ஒவ்வொரு தடவையும் கார்ல் மார்க்ஸின் நூல்களையே நான் பரிசளிப்பேன். 1988 ல் 'மார்க்ஸ் பிறந்தார்' என்ற நூல் பரிசளித்ததாக ஞாபகமிருக்கின்றது. 1989 ல் மே 5 ல் அவனது இறுதி பிறந்த தினநாள் சிறப்புடனேயே நிகழ்ந்தது. அன்றும் நான் பரிசளிந்தது எஸ். தெபரனவா எழுதிய 'கார்ல் மார்க்ஸ் வாழ்க்கைச் சுருக்கம்' நூலாகும்.

கூடிக்குழாவி வீதிகளில் திரிந்த நாட்களிலும், மக்கள் திரளும் கோயில் வீதிகளிலுல் நின்று 'பொழுது' போக்கிய வேளைகளிலும், 'அவன்' கண்கள் யாரையோ தேடிக்கொண்டிருக்கும் கணங்களிலும், பள்ளி வகுப்பினில் கரும்பலகையை வெற்றுக் கண்ணுல் உற்று நோக்கிடும் வேளையிலும், சிரித்தமுகமும், கூர்ந்த கண்களும், இதழ் விரித்த உதடுகளும் எவரையும் மறக்கப்பண்ணி விடமுடியாது வார்த்தைக்கு வார்த்தை ஆழ்ந்த அர்த்தங்களுடன் கனிவாகக் கதைத்து அனைவரையும் கவர்வதில் வல்லவன்.

இறுதியாக! ..

மரணம் அவனை இறுக்கப்பற்றிடப்போவதை எண்ணி அவன் அஞ்சவில்லை. அதற்காக மரணத்தை எதிர்த்துப் போரிடவும் முனையவில்லை மரணம் அழைக்கும்போது புன்சிரிப்புடனே சென்றடைந்தான். இதோ அகிலனின் வாழ்வின் இறுதி அத்தியாயமாக! இறுதி நாட்களில் எழுதிய கவிதைகளில் ஒன்றிலிருந்து: மரணத்தின் நாட்களை / நாங்கள் எண்ணுகிறோம்!/ இப்போது எல்லாம் உணர்கிறோம் / மரணம் கடினமான தொன்றல்ல! / ஒரு நாயாய், ஒரு அநாதைப் பிணமாய் / புதிய எஜமானர்களுக்காக / தெருக்களில் மரணிப்பதை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்கின்றோம்! / மகிழ்ச்சிக்காகப் போராடி / மக்களுக்காக இறப்பதை / நாம் விரும்புகிறோம்!...

ஈழமாதா பெற்றெடுத்த புதல்வன்; ஈழ மண்ணையே முத்தமிட்டபடி மரணத்தை எய்தினன். அவன் மரணம் துப்பாக்கிக் கலாச்சாரத்தின் அழியாத சின்னமாகப் பதியப்பட்டுவிட்டது. அவன் மரணம் தந்தைக்காக தனயன் இன்னுயிர் ஈந்த புதுவரலாருக நிகழ்ந்தது.

இனி!

அகிலன் கவிதைகளை வாசிக்கும் உங்கள் உள்ளங்களில் எழும் ஆத்ம ராகங்களே அவனின் ஆத்மாவுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும். இக்கவிதைத்தொகுப்பை வெளியிடுவதில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் நன்றி.

10.5.90
யாழ்ப்பாணம்
ஈழம்.

தோழமையுடன்
ப. விக்கினேஸ்வரா ஐங்கரன்
- சார்ள்ஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் வித்தியாசமானவளுக்கு...!

இங்கே
கொட்டிக் கிடக்கும்
இரவுகளை யெல்லாம்
அள்ளிக்கொண்டு
போ......!
உனக்கென்று கொடுக்க
இதைவிட நல்லதாய்
என்னிடம்
வேறு என்ன
இருக்கிறது......?
உனக்குத்தான் தெரியுமே;
நான்
கொள்ளையடிக்கப்பட்ட வீடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே
காதலிக்காவிட்டால் கூட
பரவாயில்லை
கணவனுகவாவது ஏற்றுக்கொள்
''அதறகு''
யாராக இருந்தால்தான்
என்ன......?

o o

## எங்கள் மரணம்

மரணத்தின் நாட்களை
நாக்கள் எண்ணுகிறோம்!
இப்போது எல்லாம் உணர்கிறோம்
மரணம் கடினமானதொன்றல்ல!
ஒரு நாயாய்; ஒரு அநாதைப் பிணமாய்
புதிய எஜமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை நாம் வெறுக்கின்றோம்!
மகிழ்ச்சிக்காகப் போராடி
மக்களுக்காக இறப்பதை
நாம் விரும்புகிறோம்......

o o

(ஹைக்கூ கவிதை)

## நீ

வீதியில் நீ நடந்தால்
கண்கள் எல்லாம்
உன் மேல்தான்

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளையாவது நிரந்தரமாகட்டும்...

இன்றைய நாள்
இறந்து போயிற்று!
வேறொன்றுமில்லை
மெல்லியதாய் ஒரு குண்டொலி
கூடவே ஓரிரண்டு வேட்டுக்கள்
காக்கி உடையில்
துப்பாக்கி சனியன்கள்
சிதறி வந்தன......
வேற்று மொழியில்
உரத்துப் பேசின......
கதவுகள் போர்த்து
கடைகள் தூங்கின......
மக்கள் ஒளிந்திட
மாடுகள் நடந்தன!

வேறொன்றுமில்லை நண்பனே!...
மிகச் சாதாரணமாக
இன்றைய நாளொன்று
இறந்து போயிற்று!
இப்படியே
எத்தனை எத்தனை
இன்றைய நாட்கள்

எத்தனை நாள்நாம்
பொறுத்திருப்பது
எத்தனை நாள்நாம்
எமது தோட்டத்தில்
மட்டும் பூக்கள் மலரும்
புல்லினம் பாடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி போகட்டும் விடு
இன்றைய நாள்தானே
இறந்து போயிற்று
எழுந்து வா
நாளையை ஆவது
நிரந்தரமாக்குவோம்......

o o 4-1-88

# மீண்டும் நான் உயிர்ப்பேன்...

நல்லது கடவுளே நல்லது
நீர் அப்படியே இரும்.
கைகளை கட்டி
புன்னகை புரிந்து
அடிக்கடி புணர்ந்து
மலர்களைச் சுமந்து
நீர் அப்படியே இரும்

என்னைக் கொல்லப்போகும்
இயந்திரத் துப்பாக்கியின் ஒலியே
ஒலியின் எதிரொலியே
அவளிடம் சொல்லுங்கள்
நம்பிக்கை தரும் சொற்கள்
பஞ்சாங்கத்தில் இல்லையென்று...

எப்போதாவது திரும்பி வருவான்
என்ற நம்பிக்கையில்
கிணற்றடி வைரவர்க்கு
இப்போதும் செவ்வரத்தம் பூ
வைக்கின்ற என் அம்மாவிடம்
சொல்லுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இப்போது இறந்தேன்
என் குருதி உறைந்த இம்
மண்ணில் நான்
மீண்டும் உயிர்ப்பேன்.
மூன்று நாள் என்பது
அதிகபட்சம்
என்னை புதைத்த
புதை குழிமேல்
முதலாம் புல்
முளைவிடுமுன்
நான்
மீண்டும் உயிர்ப்பேன்!

o o

## இனி!
## அரும்ப முடியாத ஒரு பூமரம்...

ஒரு நாள்
ரோஜா;
ஒரு நாள்
மல்லிகை;
ஒரு நாள்
கனகாம்பரம்;
உன் கூந்தலில்
சூடியதாய் ஞாபகம்...
அது சரி பெண்ணே;
உன் இதயம்
எப்போது கூந்தலானது..?

81765



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே;
நீ ஊமையில்லை
என்பதை நிரூபிக்க
நான் எவ்வளவு பேசவேண்டியிருக்கிறது பார்...!
காதல் தேவதையே;
உன்னை நான்
அழைக்கவில்லை;
உனக்காக நான்
காத்துக்கொண்டிருக்கவுமில்லை;
ஆனாலும்
வந்து விட்டாய்
கையில்
பூக்களைக் கொடுத்துவிட்டு
கண்களில்
கண்ணீரை வைத்து விட்டாயே.!

o o

என் மெழுகுவர்த்தியே;
எனக்கு மட்டும்
கொடுப்பதற்காக
இன்னமும் எவ்வளவு
கண்ணீரை வைத்திருக்கின்றாய்..?
இருக்கட்டும்..
உன்னுடைய பெயரைச்
சொல்லிக்கொண்டு
என்னோடு எப்போதும் வேறு என்னதான்
இருக்கப்போகிறது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
காதல் தோட்டத்தில்
எத்தனையோ
பூக்கள் பூத்து
உதிர்ந்து
மீண்டும் பூத்து
இப்போதோ
உனக்காக
என்னிடத்தில் ஒரு பூ...!
உதிர்ந்து விடாதே;
மறுபடியும் பூப்பதற்கு
என் செடியில்
அரும்புகள் இல்லை!!

o o

## மரணம் வாழ்வின் முடிவல்ல...

கோரைப் புற்களின்
விளிம்புப் பற்களில்
சூரிய கதிர்கள்
சிதறி அடிக்கும்.
அன்றைய மாலையில்
உன்னையும் கொன்றனர்.

அவர்கள் வந்தனர்
கையில் என்னென்னமோ
நான் அறியேன்
நெஞ்சில் உள்ளது மட்டும்
கண்களில் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுதல் என்பது
சாத்தியமின்றி
திகைத்துப்போய் நீ
நின்றிருந்தாய்

அந்த ஒரு கணத்தை
நான் என்ன வென்று
மறப்பேன்!
சீறிச் சினுக்கும்
துப்பாக்கி ரவைகள்
மண்ணுக்குள் புதையும்
வீசியெழும் துகள்கள்
நாசியுள் நிறையும்
மண்தோண்ட
எழும் ஊற்றாய்
குருதி வழியும்
விழிகளில் உறையும்


"மானிட நேயம்
மனித உரிமை"
உரத்தே கத்தினும்
வோட்டோசை இடையில்
தேய்ந்து கரைந்து
மறைந்து போகும்.

சுடுதல் எரித்தல்
தலையை மட்டும் வெட்டி
எடுத்தல்
சுலபம்தான்
மக்களின்
மனங்களில் இருத்தல்?...

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது தனிமையை நீக்குவாயா...?

இந்தத் தனிமை
மிகவும் கொடுமையானது .
என் அன்பே
ஒரு மல்லிகைப் பூவைப்போல
மனதினுள்
பாதுகாத்து வைத்துள்ளேன்
உன் நினைவுகளை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று அசைய மறுக்கும்
இரவுகளில்
சூரியன் மட்டும்
ஒளியைத் தரும்....
பகற்பொழுதுகளில்
நெஞ்சுக்குள்ளே......
உன்னையும்
உன் நினைவுகளையும்
சுமந்தபடி... ..

தாங்கும் சக்தியை
உலகத்தில் வாழும்
இயலளவை
இழந்து விடும் முன்பு
என்னை நீ வந்தடைய மாட்டாயா?
எனது
ஆளுமைகளை எனக்கு
நீ மீட்டுத்தர மாட்டாயா?
எனது கனவுகளை
நனவாக்க மாட்டாயா?... ..

எனக்கென வரைந்து கொண்ட
லட்சியங்களை
கடமைகளை
நிறைவேற்றும் வலுவை
உடலுக்கும்
உள்ளத்துக்கும்
நீ...
வழங்கமாட்டாயா?

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவும் கனவும் இல்லாத ஒரு நிலையில்

இருளுமில்லாத ஒளியிமில்லாத
அந்தவேளை
துட்டத் தொழில் புரிந்து
சுருண்ட மனம் கொண்டவர் முன்
தெரியாத
உடலவஸ்தை புரியாத நிலையிலே
விடுதலை மேடையிலே — நீ
காக்கும் நிலைக்கு உயிராக
நினைவுமில்லாத கனவுமில்லாத
ஒரு நிலையில்......

ஒருத்தர் முகத்திலும் முழுமை தெரியாமல்
கண் கலங்காமலும் அழலாம் என்று
காட்டிக் கொண்டு
உன் மரணத்தில் நாங்கள் படிக்கின்றோம்

o o

## என் காதலியே...

ஏன் என் மீது கோபங் கொள்கிறாய்
நிலாவே நில்லு
ஏன் என் மீது கோபங் கொள்கிறாய்
நீ இல்லாத வானத்தை
கற்பனையில் கூட எண்ணாத
இராக்கால கவிஞன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதலியே...
ஏன் மீது என் கோபங் கொள்கிறாய்!
காத்திருந்து காத்திருந்து
காலமெல்லாம் போனதுண்டு
பூத்திருந்த புது மலரே
நீ பிரிகிறாய் கோபங் கொண்டு
மலரோடு வண்டு கூட
ஊராராய் சுற்றிவர
உனை எண்ணி நானிங்கு
ராராவாய் அலைந்து வருவேனே!......

o o

# நாளை விடியலில்!...

எமது இரவுகள்
நிச்சயமற்றுப் போயின..
படுக்கைக்குப் போகு முன்
இறுதி அர்த்தங்களுடன்
பார்த்துக் கொள்வோம்...

அன்பே..
இந்த இரவில்
நாம் இறக்கா திருந்தால்
மீண்டும் நாளை
பனித்துளி படிந்த
துலாக்கயிற்றில்
விரல்கள் பதிப்போம்....

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் இரவினில் முதுமையடைந்தாலும்......

(அகிலனின் பிடித்தமான சினிமாபாட்டு வரிகளில் இருந்து)

வா என்று கூறாமல்
வருவதில்லையா — காதல்
தா என்று கூறாமல்
தருவதில்லையா?
சொல் என்று சொல்லாமல்
சொல்வதில்லையா — இன்பம்
சுவையென்று சுவையென வளர்வதில்லையா

தத்தித்தத்தி நடப்பதற்கே
சொல்ல வேண்டுமே — நீ
முத்துமுத்தாய்ச் சிரிப்பதற்கே
தாளம் வேண்டுமா
முத்தமிழே முக்கனியே
மோக வண்ணமே — நீ
இப்பொழுதும் எப்பொழுதும் நமது
வண்ணமே

எங்கே என் காலமெல்லாம்
பறந்துவிட்டாலும் — ஓர்
இரவினிலே முதுமையை நான்
அடைந்துவிட்டாலும்
மங்கையுனைத் தொட்டவுடன்
மறைந்து விட்டாலும் — நான்
மறுபடியும் பிறந்து வந்து
மாலை சூடுவேன்.

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய குருஷேத்திரத்தில்...

கிடுகு ஓலை வேலிகள் கூட
அதிர்ந்து நின்றன!

அன்றைய காலையில்
செங்குருதியுடன் சூரியன் எழுந்த
அன்றைய காலையில்
கிடுகு ஓலை வேலிகள் கூட
அதிர்ந்து தான் நின்றன!

மரணத்தை
அதன் நேர் முகத்தை
மட்டும்
தரிசித்து வந்து
எங்கள் பூமி
அதன் வெற்றி
என்னும்
இரண்டாம் முகத்தை
அன்றைய காலையில் தான்
காணமுடிந்தது..

ஓ.... மரணம் கூட
இத்தனை வலியதா?
ஒரு தனி
போராளியின் மரணம்
எதிரியின் மன உறுதியைத்
தரை மட்டமாக்குமோ
கூடவே முகாம் சுவர்களையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை நண்பா
இல்லை
அன்று தான் நீ
மீண்டும் பிறந்தாய்
நீ இறந்து விட்டாய்
என்று
சொல்லித் திரிபவர்களையும்
கண்டால்
நான் மெல்லவே
சிரிக்கிறேன்
ஏனெனில்
அன்று தானே நீ
புதிதாய் பிறந்தாய்

நெல்லியடியில்
கல்லை
கல் மேல் படிந்த மண்ணை
மண்ணின் தூசியை
தூசியை தூக்கிச் செல்லும் காற்றை
கதவை, நிலையை, மரத்தை, மாட்டை
மக்களைக் கேட்டுப் பார்!......

உன்னை
பெருமையுடன் நினைவு கூருவதை...

உன் மரணம்
ஆயிரம் உன் பெயர்
கொண்டவர்களை
உருவாக்கியது
வளர்த்தெடுத்தது
உறுதிப் படுத்தியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே என்
உயிர் நண்பா
நீ போய் வா
உன் கடமைகள்
இந் நாட்டுக்கு
செய்து விட்ட
பூரிப்புடனேயே நீ
போய் வா

இன்றைய குருஷேத்திரத்திற்கு
மில்லர்கள்
தயாராகி விட்டனர்!

o o

"விடுதலை ஆசிரியனாக அகிலன்"

மறைந்த அகிலனின் இலக்கியப் பணிகள் பலவும் காலத்தால் மறைந்து விட்டன. ஆயினும் அவனை நேசித்தவர்களிடமிருந்து ஒரு போதும் மறைந்திடாது. 1985 இல் ''தமிழீழ மாணவர் பேரவை'' (TESO) யின் சிரேஷ்ட தோழனாக இருந்து பாடசாலை வெளியீடான 'விடுதலை' எனும் கையெழுத்துப் பத்திரிகையின் ஆசிரியனாக அகிலன் கடமையாற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காதல்

காதல் நெருப்பில்
கடலும் எரியும்போது
கர்ப்பூரம் என்னாவது

o o

## என்னைப் பாடச் சொன்னால்

தனிமையில் தாகம்
சபையினில் மௌனம்
உறவுதான் பாடல்
உணர்வு தான் கானம்
அன்பு கொண்ட நெஞ்சில்
அனுபவம் இல்லை
என்னைப் பாடச் சொன்னால்
என்ன பாடத்தோன்றும்

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இரவுகள் இனியும் மறக்கலாமோ!

எங்கள் மண்ணும் இந்த நாட்களும்
இழந்த வசந்தமும்
இறந்த மனிதர்களும்
மரணித்த முகங்களும்
நீ எங்கு போகிருய் என்பது தெரியவரும்..
நாம் எங்கு போவோம் என்பது அறியோம்..
தெருவில் எமது தலைவிதி உள்ளது!!

நீயும் சுடப்படலாம்
நானும் சுடப்படலாம்

யாரிதைக் கேட்க...
மக்களைக் காக்க வந்தவரே
மக்களை அழித்திடும் போது
யாரிதைக்கேட்க
யாரிடம் கேட்க!
இந்த இரவுகள் இனியும் மறக்கலாமோ!...

o o

# எங்கள் பாலகர்

அந்த
தொட்டில் குயில்
அழுதது....
பாலுக்கு அழவில்லை
பாலைக்கு அழுதது..
அது
சோற்றுக்கு அழவில்லை
சுதந்திரத்துக்கு அழுதது...

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன பாண்டிய மகாசக்கரவர்த்தி..

நான் நவீன பாண்டிய மகாசக்கரவர்த்தி...!
என்னிடம்
கண்ணகி கேட்டாள்
தன் மனச்சிலம்பை உடைத்துக் காட்டவா என்று...
நானோ
மறுத்து விட்டேன்....!
அதில்
என்னுடைய பவளங்களுக்குப் பதிலாக
வேறு யாருடையதாவது
முத்துக்கள் இறந்து விட்டால்......?

o o

## எழுதப்படாத சரித்திரம்

எழுதப்படாத சரித்திரம்
துயர் சூழ்ந்து;
இரத்தம் சிந்திய தெருக்கள் மீது
நெல் விளைகிறது; சணல் பூக்கிறது;
மழை பெய்கிறது...
..................................................
நீ துயில்க......
அந்நியர்கள் வந்துவிட்டார்கள்
என்பதையாவது நான்
இவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்...!!

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணித்த சாசனம்

இருக்கைதானு முக்கியம்
இல்லை
இருப்புக்கள் தான்
மனித இருப்பையே
மறுத்து விட்டு
அழுலுக்கு வரும்
ஓ...
பந்தம் ..
ஓ ..
மரண சாசனம்!

o o

[இலங்கை - இந்திய ஒப்பந்த ஓராண்டு நினைவாக
'கொழுந்து' சஞ்சிகையில் வெளியாகிய
அகிலனின் கவிதை]

## அவனும் மரணித்தான்!

அச்சம் தரும் வகையில்
சோளகக் காற்றின் நடவல்
தெருவோரத்து வேப்பமரத்தில்
சோகம் தொனித்த ஒரு குருவியின் கூச்சல்
ஆர்ப்பரித்து எழுகின்ற
அலைகடலையும் கடந்து
அலைகள் தழுவிய காற்றில் கலந்தது
மீண்டும் ஓர் மரணத்தின் செய்தி
இப்போது அவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயத்தில் நீ..

உன்னை இதயத்தில் பூட்டி வைத்தேன்
அதில் என்னையே காவல் வைத்தேன்
அவள் கதவை உடைத்தாளோ
கண் சிரகை விரித்தாளோ
தன் சிரகை விரித்தாளோ? ..

o o

# பெண்ணைப் பாடச் சொன்னல்

நிலவில்லா வானம்
நீரில்லா மீனும்
பேசாத பெண்மை
பாடாது உண்மை
கண்கள் மெல்ல மூடும்
தன்னையெண்ணி வாடும்
பெண்ணைப் பாடச் சொன்னல்
என்ன பாடத் தோன்றும் --

o o

# அழுக்கு.. அழுக்கு..

நாம் பொல்லாதவர்கள்!
இல்லையேல் மல்லிகைப் பூவிற்கும்
ஜாதி பிரித்திருப்போமா?......
நதிக்கரையில் பிறந்ததாம்
நாகரீகம்!!
நதிக்கரையில் பிறந்துமா
அதன்மேல்
இத்தனை அழுக்கு! இத்தனை அழுக்கு!!

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான புரு

மீதம் இருக்கும்
அத்தனை பேரையும்
கைது செய்;
வாயை அடை;
கண்கள் இருந்தும்
குருடனுக்கு;
மறுப்பவர்களை
சுட்டுத்தள்ளி
வாய் பிளந்து
காத்து நிற்கும்
பூமியில் போட்டு
புதைத்து மூடு;
உஷார்...... உஷார்......
அதோ.. ..
" சமாதானப் புருக்கள் "
ஒப்பந்தம் செய்ய
பறந்து வருகின்றன!

o o

[இக்கவிதை ''மாணவர்களை இலக்கிய மன்ற 'த்தின் 'கொழுந்து' சஞ்சிகையில் அகிலன் எழுதியதாகும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ், தி. அகிலன் □

## அந்நியர்கள் வந்து விட்டார்கள்......
## ஆயினும்
## நீ துயில்க!......

அன்றைய இரவு
அடர்ந்தகான கருப்புப் போர்வைக்குள்
பூமியிருந்ததாய் எனக்கு ஞாபகம்
அதுவுமல்லாமல்,
வெளிச்சமிருந்த சில மனுமின்றி
ஓலையின் அசைவு; ஓர் குழந்தையின் அழுகை
தொலைவிலிருந்து எழுந்து வருகின்ற ரயிலின்
நீண்டகுரல்,
ஒன்றுமில்லாமல் ஓர் எழுதப்படாத சோகம்.........

பாருங்கள்;
ஒரு கதை போல் சனங்கள்
எனக்கு அதைச் செல்ல முன்பு
அன்றைய இரவில் நான் உணர்ந்த சோகம்
அதிசயமல்லவா?
முகமும் விழிகளுமில்லலாத வெறும் மனிதர்களுக்கு
அவனது மரணம் ஓர் செய்திபோல.........
மீளவும் தூக்கம் வரும்வரை கதைக்கிற செய்தி......
இன்றைக்கு இரவு அன்று போலல்ல,
நிலவு தெறித்த இலைகள் சுவரில் மிதந்தன
விளக்கில்லாத தெருவில்; வீட்டில்களுமில்லை
நான் இதை எழுதத் தொடங்கும் போது
முகமற்றவர்கள் தூங்கப் போய் விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன விதமாய் இப்படி நிகழ்ந்தது
உன் நிமிர்ந்த நடையும் நறுகிய மீசையும்
எனது நினைவில் இருந்தன ....
வடலிகள் விரியும் சுடலையின் பக்கமும்,
கிழக்கே பனைவெளிப் புறத்திலும்,
அப்பால் உயனை வெளியிலும்,
சீட்டியுடன் திரிந்தது
எனது நெஞ்சில் உள்ளது
பொன் வண்டுகள் மினுங்கும் என்று,
இலந்தை மரங்களை மேய்ந்து திரிந்ததும்;
மணிப்புறு பிடிக்க வைத்த கண்ணியில்
அடுத்த வீட்டுக் கோழிகள் நெரிந்ததும்;
உனக்கும் தெரியும்.
மீண்டும் மீண்டும் பிள்ளையார் கோயிலின்
தீர்த்தக் கரையில் குத்தியிருந்ததும்;
பயறு கொய்ததும்;
பாய் விரித்துப் பசும்புல் என்று
படுத்துக் கிடத்ததும்
இவற்றை மறுத்தல் இயலுமா எனக்கு?


பிரிந்து போனாய் நீ
நண்பர் இன்று உனை இப்படித்தான் காண
நேர்ந்தது.

"இரத்தமும் சதையும்
நிணமும் எலும்பும்"... ..

அன்று,
வானை நோக்கி எலும்புகள் நீட்டிச்
செத்துப் போன ராட்சத மரமாய்
நெருப்பில் கருகி நின்றது வீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உனது வீட்டை இரவில் கொளுத்தினர்!
சூரியன் பிளந்து சிதறும் குருதியாய்,
கிடுகுகள் விலக்கி ஒளிரும் கதிர்களை,
தெருவில் நின்று பார்க்க நேர்ந்தது.

உனது நிலத்தை அவர்கள் பறித்தனர்
இன்று
உன்னைக் கொன்றனர்!
உன்னை அவர்கள் கொன்றனர்!

இன்றோ,
பழைய கதையை மீண்டும் பார்க்கின்றேன்,
ஆவரசஞ் செடி, அதன் புறம் கள்ளி
ஆட்களோ இன்றி



81765

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் மட்டும் தனித்துப் போன அவ்வெளியில்
இன்றும்
ஆட்காட்டிகளே கூக்குரல் எழுப்ப
உன்னை இழந்து திரும்பினர்
பின்னால் நானும்!

நெருஞ்சி மலர்கள் மஞ்சளாய் நிமிர்கிற மண்ணில்
ஒரு பிடி கூட உனக்குச் சொந்தமில்லை!
இன்று, என்றுமேயில்லை
உன்னையும் கொன்றனர்

ஆயிரம் விரல்கள் உன்னை நோக்கி
துவக்கு முனைகளாய் நீண்டபோதும்
கோடையில் வெடிக்கிற யாழ்ப்பாணத்தின்
பாலை மண்ணின் உறுதியாய் நிமிர்ந்தாய்!

உன்னைக் கொன்றனர்!
உன்னை அவர்கள் கொன்றனர்!!

எழுதப்படாத சரித்திரம்
துயர் சூழ்ந்து,
ரத்தம் சிந்திய நிலங்கள் மீது,
நெல் விளைகிறது, சணல் பூக்கிறது
மழை பெய்கிறது ........!

நீ துயில்க!
அந்நியர்கள் வந்து விட்டார்கள் என்பதையாவது
நான்
இவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்!!

(சேரனின் கவிதை ஒன்றின் சாயலில் அகிலனால்
எழுதப்பட்டது)

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். தி. அகிலன் ◻

## வெற்றியும் நாங்களும்

தபால் துறையின் தாமதம் மாதிரி
வெற்றி எப்போதும்
விரைவில் வருவதில்லை
தவறான முகவரிபோல்
தட்டிப் பார்த்துவிட்டு
எப்போதாவது வரலாம்
அதுவரை
திறந்திருக்கும் எம் கதவு
ஏனெனில்
வெற்றியென்பது
தபால் துறையின் தாமதம் மாதிரி...

o o

## சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து

ஏன்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது!
எனது மக்கள் முகங்களை இழந்தனர்!
எனது நிலம்; எனது காற்று
எல்லாவற்றிலும் அந்நியப் பதிவுகள்!

கைகளைப் பின்புறம் கட்டி
யாருக்காகக் காத்திருக்கிறீர்கள்
முகில்கள் மீது நெருப்பு
தன் செய்தியை எழுதியாயிற்று...!
இனியும் யார் காத்துள்ளனர்!

வருக!
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக!!

o o



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

("சுவடு படிந்த சோகங்கள்" எனும் இக்கவிதை மறைந்த இளங்கவிஞரான எஸ். தி. அகிலனால் 1988 மேயில் எழுதப்பட்டது. வடமராட்சியில் இலங்கை இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட "ஒப்பரேசன் லிபரேசன்" கொடுமைகளை நினைவு கூர்ந்து "மாணவர் இளைஞர் பொது மன்றம்" (GUYS) வெளியிட்ட "கல்லறை மேலான காற்று" என்ற கவிதைத் தொகுப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

## சுவடு படிந்த சோகங்கள்

சோகத்தின் பாதைகளே
தேசத்தின் வரைபடமாய்
பரிணமித்தன.........

குருதியின் குருத்துகள்
விழியோரத்து சுவடுகளாய்
உறைந்தன.........

துயரத்தின் சிறகுகளால்
துடைக்கப்பட்ட நாட்கள்
தினமும்
பிறந்து ......
வாழ்ந்து.........
இறந்து கொண்டிருந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப் படாத நிகழ்வாய்
பேசப்படாத மொழியாய்
மௌனமாய்.........
இங்கு
இழப்பொன்று நிகழ்ந்தது..........
நாம்.........
எதை இழந்தோம்.........
மண்ணை.........
மக்களை.........
காற்றை.........
கடலலையை.........
மூச்சை.........
முழுவதையும் இழந்தோம்.........

நாம் எதை இழக்கவில்லை.........
ஆம்......
நாம் எதை இழக்கவில்லை.....

ஐம்பத்து எட்டு.........
சிங்களம் மட்டும்
என்றதொரு சட்டம்.........
சத்திய சீலர்கள்
சத்தியாகக் கிரகமிருந்தனர்
சாத்வீகம் ஓதினர்
நடந்தது என்ன.........
தோள் தொட்டு
தொடர்ந்து வரும்
காற்றே.........
நீ...... சொல்லு.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதடிழந்து...  .....
உடுப்பிழந்து
கண் இழந்து.........
கதி இழந்து
மண் இழந்து...... ..
மானமெல்லாம் இழந்து......
தமிழன்.........
பொன்விளையும் தாய்நாடு
தேடி...... ஒடி வந்தசன்......!

தமிழா......
உன் மனம் சிறிது......
முற்றத்து அரசமரம்.........
தெற்காலே பனைவெளிகள்......
இரக்கமே இல்லாது
இரையும் கடலலைகள் ......
செப்பாட்டு மண் தோய்ந்த
கோவணத் துண்டுகள்
கழுவித் துவைத்து
காயப்போடுகையில்
அடித்துக்கூறிய
வார்த்தைகளை
நீ மறந்தாய்......
மீண்டும் சென்றாய்!
நீ... ..
மீண்டும் சென்றாய்!
பின்......
என்ன......
பின் என்ன......
மீண்டும் மீண்டும்......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டி ஈனும் பன்றியைப்போல்
தொடர்ந்து வரும்
இனவெறிகள்......

அகிம்சா வாதத்தில்
அரசமைப்பில்
நம்பிக்கை இழந்தனர்
நம்மவர்கள்
மாணவ பேரவை
மானுட விடுதலைக்கு
தோள் கொடுத்தது
புரட்சிப் பூக்கள்
துப்பாக்கிச் செடியில்
பூக்க
கரலமென்னும் காற்று
கைகொட்டி நின்றது.

எண்பத்து மூன்றில்
திருநெல்வேலி மண்ணில்
சிதறின சதைகள்......

தீவு எங்கும்
ஓடின குருதி......

தாலி இருந்து
தனயனை இழ்ந்து
எம்
தமிழ்ப் பெண்கள்
தன்னம்பிக்கை முதலாய்
தம் நாடு அடைந்தனர்

81765



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து வரும்
சோகத்தின் பயணத்தில்
இறுதியில் இணைந்தது
இனிய வடமராட்சி.......
மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்..........
பேய்கள் குவியும்!
பிணங்களை உருட்டும் ...!
பின் ........
அவற்றை ......
தவறெனச் சொல்லும்! ...
மன்னிப்பு கேட்கும்......
தேடுதல் வேட்டையின் பேரில்......
தேவைகளைத் தீர்த்துக் கொள்ளும்......
சோதனை என்னும் பெயரில்......
பெண்களை சுவைத்துப் பார்க்கும்......!
சோகம் நிறைந்த
பாடங்கள் முடிவில்
மக்கள் என்றும்
வரலாறு படைப்பர்
ஆகாயம் பிளக்கும் வரை
மானுடர்கள் எழுவர்......!
கொள்கையின் குன்றாய்
நிமிர்ந்து நிற்பர்......!

துன்பத்தின் சுவடுகளால்
துடைக்கப்பட்ட
ஓராண்டின் முடிவில்
உறுதி எடுத்துக்கொள்வோம்!
நமது தலைமுறை
நிமிர்ந்து நிற்கட்டும்.



PUBLIC LIBRARY
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதை இவனுக்குத் தொழில் அல்ல. வாழ்க்கையில் கவிதைகள் எழுத வேண்டுமென பிறக்கும் போது இவன் பேனாவுடன் பிறந்தவனுமல்ல. வகுப்பில் கல்வி பயிலும் போது இடையிடையே ஏற்படும் ஓய்வு நேரங்களில் அப்பியாசக் கொப்பிகளிலும்; சிறு துண்டுக் காகிதங்களிலும் மனதின் எண்ணங்களை வரைவான். இவன் வரைந்த மனோலயங்கள் இப்போது உங்கள் கைகளில் 'மரணம் வாழ்வின்முடிவல்ல'

விதைத் தொகுப்பாகத் தவழ்கின்றது.

ாதாவது ஆழ்ந்த சிந்தனையில் இருக்கும்போது கைகளிலுள்ள பேனா ஏதோ கிறிக்கிக்கொண்டு ருக்கும். ஒரு ஓவியமாகவோ அல்லது கவிதை நமக்கு அப்போது தென்படவில்லை. இன்று வனின் நினைவுகளை நீளப்பதிந்து நிற்கும் காட் பதியப்பட்டுவிட்டன

லுடன் ஒன்றிய இவன் வாழ்வு எத்தனையோ ரும்புகளை விட்டிருந்தது. ஆயினும் ஒருதடவை வ பூக்கவில்லை. இவன்தன் இளவயதின் ரகசி அனைத்தையும் கவிதையில் வடித்துத்தந்துள் ணித்த இளவலின் இதயராகங்கள் நம் காது கேட்கின்றதல்லவா? அவனின் மனோலயங் ள் மனதில் நீண்டகாலம் நிலைத்திருக்குமல் வன் கவிதா வீச்சுக்கள் மரித்த மாந்தரையும் ச் செய்யும் அற்புத மருந்தாகும். ஆனால் மீண்டும் உயிர்த்தெழுவானோ.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org